*2023 அக்டோபர் 10]* [திரு. தா.மோ. அன்பரசன்]

*முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நாடறியும். எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளைச் சேர்ந்தவர்களெல்லாம், யாருடைய தூண்டுதலுக்கும் ஆட்படாமல், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, தொழிலாளர்களுடைய நலனைப் பேணி காத்திட, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று* MSME *நிறுவனங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதுதான் அரசினுடைய விளக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 7. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) விளக்கம், விளக்கம் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் அளிக்கிறீர்களா, அளிக்கவில்லையா?*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுத் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய 2023-2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவினுடைய 20 ஆவது அறிக்கையை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

*பிற்பகல் 1-15*

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. அ. சௌந்தரபாண்டியன்] [*2023 அக்டோபர் 10*

*2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்து எட்டாவது முதல் எண்பத்து ஐந்தாவது வரையிலான 18 அறிக்கைகளைப் பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

## (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவினுடைய எட்டாவது மற்றும் ஒன்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

## (ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மக்களின் முதல்வர், பொற்கால ஆட்சியின் முதல்வர், எங்கள் மகளிரின் அன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சிரம் தாழ்ந்த நன்றியையும், வணக்கத்தையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.